மேலும் எங்கள் பகுதியில் ஆத்தூர் அருகே கலைக் கல்லூரியை பொது நிதியிலிருந்து நாம் கட்டிக் கொண்டிருக்கிறோம். மேலும் அரசாங்கத்திற்கு எஸ்டிமேட் போன்றவைகளெல்லாம் அனுப்பப்பட்டால் தான் மேற்கொண்டு அரசாங்க நிதி கிடைக்க வாய்ப்பு ஏற்படும். இதை விரைவிலே எடுத்து செயல்படுவதற்கு அரசாங்கத்திற்கு எடுத்துக் கொடுப்பதற்கு வேண்டிய ஆக்கமும் ஊக்கமும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எங்கள் பகுதியில் பேளுக்குறிச்சிக்கு அருகில் தொழுநோய் பிச்சைக்காரர் இல்லம் மிக விரைவிலே கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் உயர்நிலைப் பள்ளிக்கூடங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டங்களுக்கெல்லாம் பொதுப்பணித் துறையில் பணியாற்றுகிற பணியாளர்கள் ஒத்துழைப்பு கொடுக்கிறார்கள். இன்னும் சில கோரிக்கைகளை அமைச்சரவர்களுக்கு எடுத்துச் சொல்ல இருக்கிறேன். அவைகளை எடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நெடுஞ்சாலைப் பிரிவில் பணியாற்றுகிற மிகவும் கடை நிலையில் இருக்கிற கேங்கு கூலிகள் கடந்த பல ஆண்டு காலமாக கூறி வந்த கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. குறிப்பாக இந்த கேங்கு கூலிகளாக வேலை செய்கிறவர்கள் அத்தனை பேரிலும் சுமார் 90 சதவிகிதத்தினர் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய பிரதிநிதியாக வந்திருக்கிற நான் கேட்டுக் கொள்வதெல்லாம் அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். போதிய ஊதியம் கொடுக்க வேண்டும். மின்சாரத் துறையிலே எப்படி நிரந்தரமாக்கினார்களோ அது போல இவர்களை நிரந்தரமாக்க வேண்டும். அவர்களுக்கு சுகாதார வசதிக்காக நிதியெல்லாம் கொடுத்து, ஆதரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பொதுப்பணித் துறையிலே டிப்ளமா ஹோல்டர்கள் கொடுத்த கோரிக்கைகளையெல்லாம் பரிசீலனை செய்து நல்ல ஊதியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

(7) அறிவிப்பு

பேரவை உறுப்பினர் திரு. எஸ். எம். துரைராஜ் கைது செய்யப்பட்டது குறித்து.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that I have received the following telegram today from the Superintendent of Police, Madurai South.

"I am to inform you that Thiru S. M. Durairaj, M.L.A. of Tamil Nadu Legislative Assembly was arrested today 21st March 1973 at 11.50 hours at Madurai for conspiracy to go in an unlawful assembly for rioting with deadly weapons to commit mischief and attempt to cut and murder one Arumugam, 26th Ward, Secretary, of DMK at Madurai stop. The occurrence is under investigation in Madurai Town Central Station Crime Number 530/73 under Sections 147, 148, 149, 307, 426, 440, 506 (2) IPC and 109 IPC read with 120-B IPC. He is sent to court for remand.

THIRU J. JAMES: All sections under IPC.

MR. DEPUTY SPEAKER: There are 500 and odd Sections under IPC.

(5) 1973-74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

*** திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவரவர்களே, நாட்டிலே வறுமையைப் போக்குவது, பொருளாதார வளர்ச்சியை அதிகப்படுத்துவது போன்ற முக்கிய மான பணிகளையெல்லாம் அடிப்படையிலே செய்து தரவேண்டிய பொதுப்பணித் துறையினருக்கு நான் எனது நன்றியை தெரிவித்து என்னுடைய சில கருத்துக் களைச் சொல்ல முன் வருகிறேன்.

நம்முடைய எதிர்கால வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது விவசாயம். அந்த விவசாய அபிவிருத்திக்கு நீர் வசதி செய்து கொடுப்பது போக்குவரத்து வசதி செய்து கொடுப்பது பொதுப்பணித் துறை. தமிழகத்திலே நாம் மிகுந்த திறமை மிக்க என்ஜினீயர்களைப் பெற்றிருக்கிறோம். நாம் அவர் களுக்கு ஊக்கம் கொடுத்து செயல்படுவதற்கான நல்ல வசதிகளைச் செய்து கொடுப்போமானால் மிகக் குறுகிய காலத்திலேயே தமிழகத்திலே பெரும் வளர்ச்சியை நாம் எதிர்பார்க்க முடியும். அதிலே ஒன்றும் சந்தேகம் கிடை யாது. மிக அனுபவம் வாய்ந்த என்ஜினீயர்கள் நம்மிடத்திலே இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொஞ்சம் நிதி வசதி அதிகம் கொடுத்து நம்முடைய தலையீடு அதிகமில்லாமல் எதை முந்தி எடுக்கவேண்டுமோ, எதை பிந்தி எடுக்க வேண்டுமோ அப்படியே எடுங்கள் என்று அவர்களை சுயேச்சையாக இயங்க வழி விட்டு காரியத்தை வேகமாகச் செய்யுங்கள் என்று ஒப்படைப்போமானால் நம்முடைய வளர்ச்சி, தமிழகத்தினுடைய வளர்ச்சி மிக அதிகமாக இருக்கும் என்பதில் சந்தேகம் கிடையாது.